## நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை –5

### சுற்றறிக்கை

ந.க.எண். 70035/2005/ஆர்1 நாள். 11. 03. 2009

| | |
|---|---|
| பொருள் | வரி மற்றும் வரியில்லா இனங்கள்–மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்–காலம் கடந்த நிலுவையினை பிடித்தம் செய்ய கால வரம்பு " பன்னிரண்டு ஆண்டுகள் " என உயர்வு செய்தது– சட்டத்தில் திருத்தம் வெளியிடப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டது–சம்பந்தமாக. |
| பார்வை | 1. தமிழ்நாடு சட்டம் எண். 36/2008<br>2. அரசாணை (நிலை) எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள். 25.06.2008. |

******

பார்வை 2–ல் கண்டுள்ள தமிழ்நாடு சட்டம் எண். 36/2008 –ல் நிலுவை வரி மற்றும் வரியில்லாா இனங்களை பிடித்தம் செய்ய காலவரம்பு நிர்ணயம் செய்ததை உயர்வு செய்து கீழ்க்கண்ட திருத்தம் தமிழ்நாடு அரசிதழ் பகுதி –4 பிரிவு – 2 எண் 168 (Tamil Nadu Gazette, Part IV – Sec 2 – No.168) நாள். 30.05.2008 –ல் வெளியிடப்பட்டுள்ளது.

1) மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 483– லும், கோயம்புத்தூர், மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 482 லும் "ஆறு ஆண்டுகள்" என இருப்பது "பன்னிரண்டு ஆண்டுகள்" எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 345–ல் "மூன்று ஆண்டுகள்" என இருப்பது "பன்னிரண்டு ஆண்டுகள்" எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டமானது அரசாணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.25.06.2008–ன்படி, 25.06.2008 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசிதழ் பகுதி–2, பிரிவு–2 எண்.194 (Tamil Nadu Gazette, Part II– Sec 2 - No.194) நாள்.25.06.2008–ல் வெளியிடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகின்றது.

ஒம்/– து. சந்திரசேகரன்,
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

பெறுநர்:-
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்,
(சென்னை நீங்கலாக)
அனைத்து நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//
கண்காணிப்பாளர்

11/3/09